RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt224s1114

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கர்நாடக இசை மற்றும் நாட்டுப்புற இசை மீது பாரதியாரின் பற்று

**நீ. கிரிதரன் சர்மா** [அ, *]

[அ] சுயாதீன ஆய்வாளர், தெமட்டகொடை, கொழும்பு-09, இலங்கை

# Bharathiyar's Passion for Carnatic Music and Folk Music

**N. Kiritharan Sharma** [a, *]

[a] Independent Researcher, Dematagoda, Colombo-09, Sri Lanka

* Corresponding Author: Kiritharansharma@gmail.com

Received: 18-08-2021
Revised: 15-07-2022
Accepted: 19-07-2022
Published: 09-09-2022

Check for updates

## ABSTRACT

Mahakavi Subramania Bharathiyar was a great poet of the twentieth century. Mahakavi Bharathiyar's works are considered as great treasures for the Tamil community. Even at an early age, Bharathiyar had a great affection and knowledge of the Tamil language. He started writing poetry at the age of seven while still studying at school. At the age of eleven, he showed his talent for poetry and the King of Ettayapuram, who appreciated his poetry, gave him the title of "Bharathi". From that day he was known as "Subramania Bharathiyar". Bharathiyar is also very passionate about music. Mahakavi Bharathiyar has given many works to this world through his attachment to music, many songs and many social ideas through his songs. In this way, some of Bharathiyar's musical works and musical messages have been examined in this research paper. The sub-topics of the study of this research paper are the sub-topics Bharathiyar and Carnatic Music, Bharathiyar and Folk Music except the introduction and conclusion respectively. Bharathiyar's attachment to music and his musical knowledge are explained under the subheading Bharathiyar's Music. Bharathiyar's attachment to Carnatic music is explained in the subtitle Bharathiyar and Carnatic Music. Finally, under the title Bharathiyar and folk music, the folk music songs created by Bharathiyar in folk music depicting the life and environment of the rural people are highlighted under this title. Therefore, various musical messages found in Bharathiyar's work under these three sub-headings have been examined in this review. These respectively are seen as the theme of this research paper.

**Keywords:** Bharathiyar Songs, Carnatic Music, Folk Music, Mahakavi, Bharathiyar works

## முன்னுரை

உலக அளவில் காணப்படும் பல வகையான கலைகளுள் இசைக் கலையானது முதன்மை கலையாக காணப்படுகிறது. உலகின் பலவிதமான நாடுகளில் அந்தந்தக் கலாச்சாரங்களுக்கு ஏற்பவும் சமூகங்களுக்கேற்பவும் பல இசைக் கலைகளை வளர்த்து வருகின்றனர். அந்த வகையில் இந்திய நாடானது இசைக்கலை வளர்க்கும் நாடுகளில் பிரசித்தி பெற்ற நாடாகும். இசையோடு சேர்ந்து பல துறைகளில் சிறந்து விளங்கும் நாடாக இந்தியா காணப்படுகிறது. இந்தியாவே பெருமை கொள்ளும் மாபெரும் கவிஞன் மகாகவி பாரதியார், இசை மீது கொண்ட பற்றினை இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. இந்தியாவின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார், உலகமே போற்றும் மாபெரும் தமிழ் கவிஞர் ஆவார். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய

பாட்டுகளின் மூலமாக நற்சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்த மாபெரும் கலைஞனாவார். தம் தாய்மொழியான தமிழ்மொழி மீது மிகுந்த பற்றுக் கொண்ட பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றி பாடியுள்ளார். விடுதலைப் போராட்ட காலத்தில், இவருடைய தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகள் மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் "தேசிய கவி" என்றும் போற்றப்பட்டார். பாரதியார் இசை மீது கொண்ட பற்று காரணமாக பலவித இசை படைப்புகளை இவ்வுலகிற்கு வழங்கியுள்ளார். அந்த வகையில் கர்நாடக இசை மற்றும் நாட்டுப்புற இசை மீது பாரதியார் கொண்ட பற்று என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வுக் கட்டுரையில் பாரதியாரின் இசைப் புலமை, பாரதியாரும் கர்நாடக இசையும், பாரதியாரும் நாட்டுப்புற இசையும் என்ற தலைப்புகளில் பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளது. இனி அவற்றை பார்க்கலாம்.

## பாரதியாரின் இசைப்புலமை

மகாகவி பாரதிக்குப் பல துறைகளில் நல்ல புலமை இருந்தும் இசையும் கவிதையும் இவரது மூச்சுக் காற்றாக விளங்கியது. பாரதியாருக்கு இசையில் மிகுந்த ஆர்வம் உண்டு. பாரதியாருக்கு இயற்கையாகவே இசை அறிவு காணப்பட்டமையினால் பாரதியார் இசையின் நுணுக்கங்களை நன்குணர்ந்த இசை மேதையாக திகழ்ந்தார். அவர் குரலைக் கேட்கும் பாக்கியம் நம் தலைமுறையினருக்குக் கிடைக்கவில்லையெனினும், பாரதியாரின் கண்ணன் பாட்டுக்கு முன்னுரை எழுதிய வ.வெ.சு. ஐயர், "புதுச்சேரி கடற்கரையில் பாரதி தனது கவிதைகளைத் தேனினும் இனிய அவனது அற்புதக் குரலெடுத்து உரத்தக் குரலில் பாடுகின்றபோது கேட்கக் கொடுத்து வைத்தவர்கள் புண்ணியவான்கள்" என்கிறார். வ.வெ. சு ஐயர் அவர்களின் இந்த வரிகள் மூலமாக பாரதியாரின் குரலின் இனிமையினை எம்மால் உணர முடிகிறது (Periyasaamy Thooran, 1982).

பாரதியார் ஒரு பாட்டை இயற்றும் போது குறித்த அந்தப் பாடலுக்கு ராகம், மெட்டு இவை அமைக்க எந்த உதவியையும் யாரிடமும் நாடாது அவர் மனதுக்குத் தோன்றிய ஒரு மெட்டில் அவரே பாடி அந்த மெட்டு அவருக்குப் பிடித்திருந்தால் அந்த மெட்டு எந்த ராகத்தின் ஸ்வரங்களோடு பொருந்துகிறதோ அந்த ராகத்தின் பெயரை மட்டும் எழுதி வைத்து விடுவாராம். அதற்குரிய தாளம் தானாக அமைந்து விடுமாம். வேற்று மொழிகளில் பல இசை பாடல்கள் பாடப்பட்டாலும் அந்த மொழிக்கேற்ற இசையினை ரசிக்கும் ரசிகன் பாரதியார். இக்கூற்றை அவருடைய புகழ்பெற்ற பாடலான "சிந்துநதியின் மிசை நிலவினிலே, சேரநன் நாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து, தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்" எனும் பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அதாவது இசைக்கு மொழி இல்லை என்பது இவரது கருத்தாக காணப்படுகிறது (Thanjavuraan, 2012). நல்ல சங்கீதம் பழக, உள்ளத்திலே வீரம் இருக்க வேண்டுமென்கிறார் பாரதி. "உள்ளத்தில் சத்து இல்லாதவர்களுக்கு ஒரு தொழிலும் நேரே வராது. கலைகள் நேர்ப்படுவதைப் பற்றி பேசவேண்டியதில்லை" என்று பாரதியார் குறிப்பிடுகிறார். மகாகவி பாரதியார் "சங்கீத விஷயம்" எனும் அவரது கட்டுரையில் சங்கீதம் சம்பந்தமாக பல விடயங்களை விரிவாக விவாதித்திருக்கிறார். அதில் 'நவரஸங்களைப் பற்றி விளக்குகையில் மனித உணர்வுகள் வெளிவரும் போது அதில் இந்த நவரஸங்களில் ஏதாவதொன்று இருந்தே ஆக வேண்டும் என்கிறார் பாரதியார். வீரம், ரௌத்ரம், அற்புதம், சாந்தம், பயாநகம், பீபத்ஸம், ஹாஸ்யம், கருணையும் சோகமும் (துயரம் அல்லது அவலம்), சிருங்காரம் (காதல்) என்பனவாகும். இந்த ஒன்பது உணர்வுகளும் மனிதனின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலும் இசை வடிவில் பாடலாக அது வெளிவரும் போது அந்தந்த பாடலின் கருத்து மட்டுமல்ல, அந்தந்த ராகங்களே கூட இந்த ரஸங்களில் ஏதாவதொன்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது (Thanjavuraan, 2012). குயில் பாட்டொன்றில் பாரதியார் இசை மீது கொண்ட பற்றினை "நான்முகக்கடவுளே, நீ எத்தனையோ விந்தைகளை படைத்திருக்கிறாய். ஆனால் இசை என்ற ஒன்றைப் படைத்தாயே அதற்கு ஈடு இணையே இல்லை" என கூறுகிறார் (Periyasaamy Thooran, 1982).

பாரதியார் இசைத்துறையில் கர்நாடக இசை, நாட்டுப்புற இசையில் பற்றுக் கொண்டிருப்பதை போன்று பரத நாட்டியத்திலும் மிகுந்த பற்று கொண்டவர். பரத நாட்டியக் கலையானது குறிப்பிட்ட ஒரு சமூகத்தவர் கையாள்வதால் அதை வெளிப்படையாகப் பார்க்கவோ, ரசிக்கவோ முடியாமல் போனதைக் குறித்து பாரதியார் வெளிப்படுத்துகிறார். பரதநாட்டியக் கலையை குறித்த ஓர் வர்க்கத்தினரால் கையாளப்பட்டு இந்தக் கலை பலருக்கும் போய்ச் சேராமல் அதை நாமே இலை மறை காய் போன்று ரகசியமாக பார்க்க வேண்டி இருப்பதாகவும் கூறி அந்த தெய்வீக கலையை நம் வீட்டில் உள்ள தாய்மார்கள், சகோதரிகள் என அனைவரும் கற்று நடனம் நிகழ்த்தும் பட்சத்தில் அதை நாம் எல்லோரும் கண்டு ஆனந்தப்படலாம் என்று அவரது கருத்தை முன்வைக்கின்றார் (Thanjavuraan, 2012). இவற்றை எல்லாவற்றையும் உற்று நோக்கும் பட்சத்தில் பாரதியார் இசை மீது கொண்ட பற்றினை நன்கு அறியமுடிகிறது. ஆகவே மேற்கண்டவை மூலம் பாரதியாரின் இசைத் திறனையும், அவரது இசைப் புலமையையும் அறியமுடிகிறது. அடுத்து பாரதியாரும் கர்நாடக இசையும் எனும் தலைப்பில் பாரதியார் கர்நாடக இசை மீது கொண்ட பற்றினை பார்க்கலாம்.

## பாரதியாரும் கர்நாடக இசையும்

கர்நாடக இசையானது இந்தியாவின் தென்பகுதியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான இசை வகையாகும். இறைவன் மூலம் எமக்கு கிடைத்த இந்த அரும்பெரும் கர்நாடக இசைக்கலையினை எமது முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக வளர்த்து வந்து இன்று உலக அளவில் மக்களால் விரும்பப்படும் ஒரு இசை வகையாக கர்நாடக இசை காணப்படுகிறது. கர்நாடக இசைக்கச்சேரிகள் ஆனது வாய்ப்பாட்டு, வாத்தியம் மூலம் பாடப்பட்டு, வாசிக்கப்பட்டு கர்நாடக இசைக்கச்சேரிகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் பாரதியார் கர்நாடக இசை கச்சேரிகளை கேட்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். பாரதியார் தான் இயற்றும் பாடல்களின் மெட்டானது எல்லோராலும் பாடப்படும் வகையிலும், புரிந்து கொள்ளும் வகையிலும், கேட்பதற்கு இனிமை பயக்கும் வகையில் மிகவும் அருமையாக காணப்படும். பாரதியாரினால் போதிய வசதி இன்மையால் இசைக் கலையினை முறையாக கற்க முடியாத நிலை காணப்பட்டது. இருப்பினும் அவரிற்கு இயற்கையாகவே இசை ஞானம் காணப்பட்டதால் நல்லதொரு இசை ஞானம் மிக்க இசைஞராக பாரதியார் திகழ்ந்தார். பாரதியார் பலவித பாடல்களை இயற்றி நல்ல மெட்டுகளில் எளிதாக எல்லோருக்கும் புரியும் வகையில் மெட்டமைத்துள்ளார். ஆனால் அப்பாட்டிற்கு பலர் வேறு மெட்டுக்களை கையாண்டு பாடும் வகையில் பாரதியாரின் பாடல் வரிகள் எல்லோர் மனதிலும் பதியும் வகையில் காணப்படுகிறது. பாரதியாரின் பல பாடல்கள், கவிதைகளுக்கு இராகமும் தாளமும் மெட்டும் தாள குறிப்பும் கொடுத்துள்ளார். அந்த வகையில் நாதநாமக்கிரியை, ஹிந்துஸ்தானி பெஹாக், காம்போதி, ஹிந்துஸ்தானி தோடி, புன்னகவராளி, ஆபோகி, வசந்தா, மணிரங்கு, சுருட்டி, கனடா, தன்யாசி, முகாரி, பிலகரி, கேதாரம், ஸ்ரீராகம் போன்ற ராகங்களில் பாரதியார் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாரதியார் தனது பாடல்களில் பல்லவி அனுபல்லவி சரணம் என்ற 3 பிரிவுகளும் மூலமாகவும் பல்லவி சரணம் என்னும் 2 பிரிவுகள் மூலமாகவும் சரணம் எனும் ஒரு பிரிவின் மூலமாகவும் பல பாடல்களை இயற்றியுள்ளார். உதாரணமாக கீழ்வரும் பாரதநாடு எனும் தலைப்பில் அமைந்த பாடலானது பல்லவி மற்றும் சரணங்கள் எனும் இரு பிரிவுகளை கொண்டது.

### பாரத நாடு

ராகம் - ஹிந்துஸ்தானி தோடி, தாளம் - ஆதி

### பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்பாரத நாடு.

### சரணங்கள்

ஞானத்திலேபர மோனத்திலே - உயர்மானத்திலேஅன்ன தானத்திலே கானத்திலே அமுதாக நிறைந்த கவிதையிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

தீரத்திலே படை வீரத்திலே - நெஞ்சில் ஈரத்திலே உப காரத்திலே சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு தருவதிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

நன்மையிலே உடல் வன்மையிலே - செல்வப்பன்மையிலே மறத் தன்மையிலே பொன்மயிலொத்திடும் மாதர்தம் கற்பின்புகழினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே - புயவீக்கத்திலே உயர் நோக்கத்திலே காக்கத் திறல் கொண்ட மல்லர் தம்சேனைக் கடலினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

வண்மையிலே உளத்திண்மையிலே - மனத்தண்மையிலே மதி நுண்மையிலே உண்மையிலே தவறாத புலவர் உணர்வினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

யாகத்திலே தவ வேகத்திலே - தனியோகத்திலே பல போகத்திலே ஆகத்திலே தெய்வ பக்திகொண்டார் தம் அருளினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

ஆற்றினிலே சுனையூற்றினிலே - தென்றல் காற்றினிலே மலைப் பேற்றினிலே ஏற்றினிலே பயன் ஈந்திடுங் காலி இனத்தினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

தோட்டத்திலே மரக் கூட்டத்திலே - கனி ஈட்டத்திலே பயிர் ஊட்டத்திலே தேட்டத்திலே அடங்காத நதியின் சிறப்பினிலே உயர் நாடு - இந்தப் (பாருக்குள்ளே)

மேலும் தேசபக்திப் பாடல்கள் இல்லாத குறையினை நீக்கும் வகையில் பாரத சமூதாயம் வாழ்கவே, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி, அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே போன்ற படைப்புகளையும் வழங்கியுள்ளார் (Periyasaamy Thooran, 1982).

தியாகராஜ சுவாமிகள் தன்னுடைய கிருதி மற்றும் கீர்த்தனைகளில் அந்தந்தப் பாடலின் கருத்துக்கேற்ப பாவம் வெளிப்படும் வகையில் ராகங்கள் அமைந்திருப்பதை “சங்கீத விஷயம்” என்ற அவருடைய கட்டுரையில் பாரதியார் குறிப்பிட்டு வெகுவாகப் பாராட்டி எழுதியிருக்கிறார் (Thanjavuraan, 2012). ஆபோகி ராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்த "நன்னு ப்ரோவ நீகு இந்த தாசமா" எனும் தியாகராஜரின் கிருதியின் பாடல் வரிகளின் பொருளுக்கேற்ப அமைக்கப்பட்ட ராகம் பொருந்தி வருவதைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆனால் தியாகராஜ சுவாமிகள் காலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்ட தெலுங்கு கிருதி, கீர்த்தனைகள் அவரது பாடல்கள் போல் அமையவில்லை என்று அவரது கருத்தாக முன்வைத்துள்ளார். பாரதியாரிடம் சீ. ஆர். சீனிவாச ஐயங்கார் என்பவர் தியாகராஜ கீர்த்தனைகளுக்கு ஸ்வரம் போட்ட புத்தகத்தினை கொண்டு தானே பாட முயற்சிகள் செய்வாராம். மேலும் தியாகராஜ சுவாமிகளின் 'நகுமோமு', 'மாருபல்க', 'நிதிசால சுகமா' போன்ற பாரதியார் மிகவும் ஆர்வத்துடன் கேட்பார் என்றும், கோபாலகிருஷ்ண பாரதியாரின் "ஆனந்த நடனம் ஆடினார்" எனும் கீர்த்தனையினை பாரதியார் அடிக்கடி பாடிப்பாடிப் பரவசமடைவார் (Thanjavuraan, 2012). ஆகவே மேற்கண்டவை மூலம் பாரதியார் கர்நாடக இசை மீது கொண்ட பற்றினை அறியமுடிகிறது.

அடுத்து “பாரதியாரும் நாட்டுப்புற இசையும்” எனும் தலைப்பில் பாரதியார் நாட்டுப்புற இசையை மீது கொண்டிருந்த பற்றினை இனி பார்க்கலாம்.

## பாரதியாரும் நாட்டுப்புற இசையும்

நாட்டுப்புற பாடல்கள் அனைத்து கிராம மக்களின் தொழில் அல்லது அவர்களது உணர்வை வெளிப்படுத்தும் வகையில் இசைக்கப்படும் பாடலாகும். இராகம், தாளம் என்று குறிப்பிட்டு காணப்படாமல் அந்தந்த நேரத்தில் அவர்களால் இசைக்கும் பாடல்களாக காணப்படுகின்றது. அந்த வகையில் நாட்டுப்புற பாடல்கள் பலவற்றை இயற்றியுள்ளார் கிராமிய மக்களின் வாழ்வினை சித்தரித்து பலவித பாடல்களை இயற்றியுள்ளார் (Thanjavuraan, 2012). அந்த வகையில் நாட்டுப்புற மக்களிடையே கும்மிப் பாடல்கள் முதன்மையானவனாக காணப்படுகின்றது. பாரதியார் பெண்கள் விடுதலைக் கும்மி என்ற தலைப்பில் 8 பாடல்களை பாடியுள்ளார் (Kalpana, 2020). அதில் காப்பு, முதற் பாடல் உதாரணமாக இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## காப்பு

"பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள் பேசிக் களிப்போடு நாம்பாடக்

கண்களி லேயொளி போல வுயிரில் கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே"

பொருள் - பெண்கள் விடுதலை பெற்று விட்ட மகிழ்வான விடயங்களை பேசி மகிழ்ந்து நாம் பாடுவதற்கு எமது கண்களில் ஒளி கலந்திருப்பது போல், உயிரில் ஒளிர்கின்ற தெய்வம் காப்பாக நின்று உதவுக (Thirunavukkarasu, 2011).

"கும்மியடி தமிழ்நாடு முழுவதும் குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி

தம்மைப் பிடித்த பிசாசுகள் போயின நன்மை கண்டோ மென்று கும்மியடி"

இவ்வாறு பாரதியின் முதல் கும்மிப்பாடல் காணப்படுகிறது. இதையடுத்து இன்னும் 7 கும்மிப் பாடல்களை படைத்துள்ளார் (Bharathiyar, 2007).

நாட்டுப்புறப் பாடல்களுள், பள்ளு, கிளிக்கண்ணி முதலியவற்றில் பாரதியாருக்கு விருப்பம் அதிகமாக இருந்தது. அந்த வகையில் ஒரு கிளிக்கண்ணி உதாரணமாகப் பார்க்கலாம்.

நடிப்புச் சுதேசிகள் என்ற தலைப்பில் பாரதியார், கிளிக்கண்ணிகள் என்ற சந்தத்தில் பாடல் படைத்துள்ளார்.

கிளிக்கண்ணி என்பது பெண்கள் தினைப்புனம் காக்கச் செல்லும்போது, தினையைக் கிளிகள் உண்ணாதவாறு வில்லுக்கட்டையில் கல்வைத்து, கிளியை ஓட்டியபடி பாடும் பாடலாகும். இந்தச் சந்தத்தில் போலிச் சுதேசிகளை எள்ளி நகையாடிப் பாடுகிறார் (Bharathiyar, 2007).

## கிளிக்கண்ணிகள்

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி, வஞ்சனை சொல்வா ரடீ! - கிளியே! வாய்ச் சொல்லில் வீரரடி!

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி, நாட்டத்தில் கொள்ளா ரடீ! - கிளியே! நாளில் மறப்பா ரடீ!

சொந்த அரசும்புவிச் சுகங்களும் மாண்புகளும் அந்தகர்க் குண்டாகு மோ? - கிளியே! அகலிகளுக் கின்ப முண்டோ?

கண்கள் இரண்டிருந்தும் காணுந் திறமையற்ற பெண்களின் கூட்டமடீ! - கிளியே! பேசிப் பயனென்னடீ!

யந்திர சாலை யென்பார் எங்கள் துணிகளென்பார், மந்திரத் தாலே யெங்கும் - கிளியே! மாங்கனி வீழ்வ துண்டோ!

உப்பென்றும் சீனி என்றும் உள்நாட்டுச் சேலை என்றும்செப்பித் திரிவா ரடீ! - கிளியே! செய்வ தறியா ரடீ!

தேவியர் மானம் என்றும் தெய்வத்தின் பக்தி என்றும்நாவினாற் சொல்வ தல்லால் - கிளியே! நம்புத லற்றா ரடீ!

மாதரைக் கற்பழித்து வன்கண்மை பிறர் செய்யப் பேதைகள் போலுயிரைக் - கிளியேபேணி யிருந்தா ரடீ!

தேவி கோயிலிற் சென்று தீமை பிறர்கள் செய்ய ஆவி பெரிதென் றெண்ணிக் - கிளியே! அஞ்சிக் கிடந்தா ரடீ!

அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறு மதியும் உச்சத்திற் கொண்டாரடீ - கிளியே! ஊமைச் சனங்க ளடீ!

ஊக்கமும் உள்வலியும் உண்மையிற் பற்றுமில்லா மாக்களுக் கோர் கணமும் - கிளியே! வாழத் தகுதி யுண்டோ?

மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்ஈனர்க் குலகந் தனில் - கிளியே! இருக்க நிலைமை யுண்டோ?

சிந்தையிற் கள்விரும்பிச் சிவசிவ வென்பது போல் வந்தே மாதர மென்பார்! - கிளியே! மனத்தி லதனைக் கொள்ளார்

பழமை பழமை யென்று பாவனை பேச லன்றிப் பழமை இருந்த நிலை! - கிளியே! பாமர ரேதறி வார்!

நாட்டில் அவமதிப்பும் நாணின்றி இழி செல்வத்தேட்டில் விருப்புங் கொண்டே! - கிளியே! சிறுமை யடைவா ரடீ!

சொந்த சகோ தரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்சிந்தை இரங்கா ரடீ! - கிளியே! செம்மை மறந்தா ரடீ!

பஞ்சத்தும் நோய்க ளிலும் பாரதர் புழுக்கள் போல் துஞ்சத்தும் கண்ணாற் கண்டும் - கிளியே! சோம்பிக் கிடப்பா ரடீ!

தாயைக் கொல்லும் பஞ்சத்தைத் தடுக்க முயற்சியுறார் வாயைத் திறந்து சும்மா - கிளியே! வந்தே மாதர மென்பார்!

இவ்வாறு பாரதியின் கிளிக்கண்ணிப் பாடல் அமைந்துள்ளது (Bharathiyar, 2007).

நாட்டுப்புறப் பாடல் வடிவில் இயற்றப்பட்டுள்ள பாரதியின் படைப்புகளானவை மிகச் சிறந்த முறையில் சிறந்த எடுத்துக்காட்டாக நாட்டுப்புறப் பாடல்களுக்கு காணப்படுகின்றது. கிராமிய வாழ்க்கையின் இயல்பு பலவற்றை தம்முடைய பாடல்களின் பாடுபொருளாகக் கொண்டு பல நாட்டுப்புற பாடல்களை பாரதியார் தமது படைப்புகளாக படைத்துள்ளார் ஆகவே இவருடைய இன்னிசை பாடல்களிலிருந்து அவருடைய பாடல்கள் எமது உணர்ச்சியை தட்டி எழுப்பும் வகையில் காணப்படும் இசைப் பாடல்களாக காணப்படுகின்றது என்பதில் நமக்கு எவ்வித ஐயமுமில்லை. ஆகவே மேற்கண்ட பாரதியாரின் நாட்டுப்புற இசை பாடல்கள் மூலம் அவர் நாட்டுப்புற இசை மீது கொண்டிருந்த பற்றினை நன்கு அறியமுடிகிறது. மேற்கண்ட துணைத் தலைப்புகளின் மூலம் பல விடயங்களை ஆராயப்பட்டு அதன் மூலம் பாரதியார் இசை மீது கொண்ட பற்றினை நன்கு அறியமுடிகிறது.

## முடிவுரை

இசையானது செவிக்கும் மனதுக்கும் இன்பம் தரும் இனிமையான ஓசை ஆகும். அந்தவகையில் பாரதியாரின் படைப்புகளும் செவிக்கும் மனதுக்கும் இன்பம் தரும் அரும்பெரும் படைப்புகளாகும். பாரதியாருடைய இசை பாடல்களானது அவருடைய இசை ஞானம் மூலம் மக்களின் உணர்ச்சியை எழுப்பும் வகையில் மிகவும் அருமையான படைப்பாக காணப்பட்டுள்ளது என்பதனை மேலுள்ள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது. தேசியக்கவி பாரதியார் தனது இசைப் படைப்புகள் மூலம் மக்களை தம் வசப்படுத்தினார் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை. இந்த ஆய்வில் ஒரு சில பாடல்களே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் பாரதியார் தேசிய கீதங்கள், பக்தி பாடல்கள், ஞானப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், தனிப்பாடல்கள், சுயசரிதை, கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், வசனக்கவிதை, புதிய பாடல்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் பலவித பாடல்களை படைத்துள்ளார். இவ்வாறான அரும்பெரும் பாரதியாரின் படைப்புகளை உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் கொண்டு சேர்த்து பாரதிக்கும் தமிழுக்கும் பெருமை சேர்ப்போமாக!

## References

Bharathiyar, (2007) Bharathiar Kavithagal, Kumaran Kumaran Pathippagam, Chennai, India.

Kalpana, B., (2020) Bharathi's Concept of Women Liberation: Legacy and novelty, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India. https://doi.org/10.34256/tak20201

Periyasaamy Thooran, M.P., (1982) Bharathiyar Noolgal Oru Thiranaiaavu, Vanathi Pathippagam, Chennai, India.

Thanjavuraan, (2012) Bharathi Payilagam Valaippoo, Thanjavur, India.

Thirunavukkarasu, S., (2011) Tamil Isai, Second Edition, Jaffna, Srilanka.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License